திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.
வாரம் ஒரு நீதிக்கதை - 11.1.2026.

## வாழ்க்கை ஒரு பரிசு..!

ஒரு ஆசிரியர் தனது மாணவர்களிடம், "உங்களிடம் 86,400 காசுகள் இருக்கின்றன. ஒரு திருடன் உங்களிடம் இருந்து 10 காசுகளைப் பறித்துக்கொண்டு ஓடுகிறான். இப்போது.. உங்கள் கையில் இருக்கும் அந்த 86,390 காசுகளை விட்டுவிட்டு ,அந்த பத்து காசுகளைப் பிடிக்க ஓடுவீர்களா? அல்லது பரவாயில்லை.. என்று விட்டு விடுவீர்களா?" என்று ஒரு கேள்வி கேட்டார்.

அனைத்து மாணவர்களும் ஒருமித்த குரலில், " நாங்கள் பத்து காசுகளை விட்டு விடுவோம். மீதமுள்ள 86,390 காசுகளைத்தான் பாதுகாப்போம்" என்று பதிலளித்தனர்.

அதைக் கேட்ட ஆசிரியர், " உண்மையில் பெரும்பாலான மக்கள் இதற்கு நேர் மாறாகவே நடக்கின்றனர். அந்த பத்து காசுகளுக்காக அவர்கள் 86 390 காசுகளையும் இழக்கின்றனர்" என்றார்.

மேலும் தொடர்ந்து ஆசிரியர்..
"86,400 என்பது ஒரு நாளில் உள்ள வினாடிகளின் எண்ணிக்கை. யாராவது ஒருவர் 10 வினாடிகள் உங்களை எரிச்சல் ஊட்டினாலோ அல்லது உங்கள் மனதைத் துன்புறுத்தும் வார்த்தைகளை பேசினாலோ அல்லது விரும்பத்தகாத ஒரு சம்பவம் நடந்தாலோ.. அதற்காக நாள் முழுவதும் எஞ்சிய 86, 390 வினாடிகளையும் நீங்கள் வீணாக்கி விடுவீர்கள்.சில வினாடி வேதனை முழு நாளையும் பாழாக்கி விடக்கூடாது. ஏனென்றால் இந்த வாழ்க்கை ஒரு பரிசு. அதை நல்ல முறையில் அனுபவித்து வாழ கற்றுக் கொள்ள வேண்டும்" என்று சொல்லி முடித்தார்.

இது மாணவர்களுக்கு மட்டுமல்ல நமக்கும் பொருந்தும்.

* * *